Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No S.T.C.NO.1261/2020
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2, Page.No.10/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புவனேஷ்வர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | அனுமுத்து | தொழில் | வேலையில்லை |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 03rd day of October 2023.
**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**முதல் விசாரணை.- ( எதிரி சபரிநாதன் ஆஜரில் உள்ளார் )**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் வேலை எதுவும் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 2020 ம் ஆண்டு தேதி, மாதம் நினைவில்லை. ஜார்ஜ்பேட்டையில் நான் நடை பயிற்சி மேற்கொண்டு இருந்தபோது, அங்கு பிரச்சனை ஏதோ நடந்ததாகவும், அதை விசாரித்தற்கு தான் வந்ததற்கு போலிசார் ஒருவர் மேலே சென்ன கையொப்பம் என்னிடம் வாங்கினார்கள். நான் என்ன பிரச்சனை என்று பார்க்கவில்லை என்றும் நான் சொல்லிவிட்டேன். **அந்த பார்வை மகஜர் உள்ள இரண்டாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**
போலிசார் என்முன்னிலையில் படம் வரைந்தார்களா என்றால் இல்லை. கடந்த 26.05.2020 ம் தேதி காலை 06.30 மணிக்கு போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை- இல்லை**
**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness